பிரஸார் பாரதி

<u>அகில இந்திய வானொலி, சென்னை-4</u>

01 04 2024 6 45

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- தமிழகத்தில் மக்களவைத் தேர்தலுக்கான வாக்குச்சாவடி சீட்டுகள் இன்றுமுதல் வினியோகிக்கப்படுவதாக தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரதா சாஹூ தெரிவித்துள்ளார்.
- திமுக தனது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என எதிர்க்கட்சிகள் தவறான பிரச்சாரம் மேற்கொண்டு வருவதாக அக்கட்சியின் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.
- மத்தியில் பிஜேபி, காங்கிரஸ் உள்ளிட்ட எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் தமிழகத்திற்கான நிதி ஒதுக்கீடு முறையாக அளிக்கப்படுவதில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.
- மக்களுக்கான நலத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு பிஜேபி முன்னுரிமை அளித்து வருவதாக அக்கட்சியின் மகளிர் அணித் தலைவர் திருமதி வானதி ஸ்ரீனிவாசன் தெரிவித்துள்ளார்.
- ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் நேற்றிரவு நடைபெற்ற ஆட்டத்தில் தில்லி அணி 20 ரன் வித்தியாசத்தில் சென்னை அணியை வென்றது.

*<u>------ இனி விரிவான செய்திகள் ---</u>*

*<<<<>>>>*

தமிழகத்தில் மக்களவைத் தேர்தலுக்கான வாக்குச்சாவடி சீட்டுகள் இன்று முதல் விநியோகிக்கப்பட உள்ளதாக தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்ய பிரத சாஹூ தெரிவித்துள்ளார்.

வாக்குச்சாவடிகளில் கூடுதல் கண்காணிப்பு கேமராக்களை பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதற்கிடையே, இந்த தேர்தலில் பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்படும் பணம் மற்றும் பரிசுப் பொருட்களும் பறக்கும் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றன.

உரிய ஆவணங்களை சமர்ப்பிக்கும் பட்சத்தில், பறிமுதல் செய்யப்பட்ட பணம் மற்றும் பொருட்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் ஒப்படைக்கப்படும் என்றும் தேர்தல் ஆணையம் தெளிவுபடுத்தியுள்ளது.

*<<<<>>>>*

தமிழகத்தில் திமுக தனது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என எதிர்க்கட்சிகள் உண்மைக்குப் புறம்பாக பிரச்சாரம் மேற்கொண்டு வருவதாக அக்கட்சியின் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

ஈரோட்டில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், மத்தியில் பிஜேபியும், மாநிலத்தில் முன்பு ஆட்சியில் இருந்த அஇஅதிமுகவும் தங்களது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்று கூறினார். பிஜேபியின் தவறான அணுகுமுறை காரணமாக சிறு குறு தொழில் நிறுவனங்களுக்கு கடன் மற்றும் மானிய உதவி கிடைப்பதில்லை என்று கூறினார்.

மத்தியில் **I.N.D.I** கூட்டணியின் விலமை அதிகரித்துள்ளதாகக் கூறிய அவர், மக்களவைத் தேர்தல் முடிவுகள் இதை உறுதி செய்யும் என்றும் திரு. ஸ்டாலின் கூறினார்.

<<<<>>>>

மத்தியில் பிஜேபி அல்லது காங்கிரஸ் என எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் தமிழகத்திற்கான நிதி ஒதுக்கீடோ, திட்டங்களோ முறையாக அளிக்கப்படவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

கஜா புயலின்போதும், கோவிட் பேரிடரின் போதும் தமது கட்சி ஆட்சியில் இருந்தபோது சிறப்பாக செயல்பட்டதாக அவர் கூறினார்.

ஆனால் மிக்ஜாம் புயலின்போது பாதிப்புகள் குறைவாக இருந்தபோதிலும் ஆளும் திமுக அரசு நிவாரணப் பணிகளை முழுமையாக செய்யவில்லை என்று குற்றம் சாட்டினார்.

கடந்த சட்டமன்ற தேர்தலின்போது அளித்த வாக்குறுதிகளில் 10 சதவீதம் கூட அக்கட்சி நிறைவேற்றவில்லை என்று கூறினார்.

தமிழகத்திற்கு தேவையான காவிரி நீரைப் பெற்றுத் தருவது, மீனவர்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது ஆகியவற்றில் தமது கட்சி முனைப்புடன் செயல்பட்டு வந்ததாகவும் அவர் கூறினார்.

<<<<>>>>

விளைநிலங்களில் தொழிற்பூங்கா அமைப்பதற்கு எதிராக போராடிய விவசாயிகளை திமுக அரசு கைது செய்து நடவடிக்கை எடுத்ததாக பாமக நிறுவனர் மருத்துவர் ச. ராமதாசு குற்றம் சாட்டியுள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி மக்களவைத் தொகுதியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் விவசாயிகள் கைது செய்யப்பட்டது வேதனைக்குரியது என்றார்.

சிப்காட் போன்ற தொழிற்பூங்காக்கள், வேலைவாய்ப்புகளை பெருக்கினாலும், அவற்றை விளைநிலங்களில் அமைக்கும் முயற்சி கைவிடப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

மக்களவைத் தேர்தலில் பிஜேபி தலைமையிலான கூட்டணி வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியமைக்கும் என்றும் திரு. ராமதாசு கூறினார்.

<<<>>>>

தமிழகத்தல் அஇஅதிமுக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட மக்கள் நலத்திட்டங்கள் திமுக ஆட்சிக்கு வந்தபின் கைவிடப்பட்டதாக தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

விழுப்புரத்தில் தேர்தல் பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், மாநிலத்தில் போதைப்பொருள் புழக்கம் அதிகரித்துள்ளதாகவும், அதனைக் கட்டுப்படுத்த மாநில அரசு தவறிவிட்டதாகவும் குற்றம் சாட்டினார்.

தங்கள் கூட்டணி வெற்றி பெற்றால் விழுப்புரம் தொகுதியில் உப்பு சுத்திகரிப்பு ஆலை அமைக்கப்படும் என்றும், விவசாயிகளுக்கான திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்றும் திருமதி பிரேமலதா விஜயகாந்த் கூறினார்.

<<<>>>>

பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீட்டை பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசால் மட்டுமே நிறைவேற்ற முடிந்தது என்று பிஜேபி மகளிர் அணித் தலைவர் திருமதி வானதி ஸ்ரீனிவாசன் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி, மதுரை ஆகிய இடங்களில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், பெண்களுக்கான அதிகாரம் மற்றும் அவர்களின் முன்னேற்றத்திற்கான திட்டங்களை தமது கட்சி முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்தியதாக கூறினார்.

சாலையோர வியாபாரிகள் தொழில் தொடங்க எவ்வித உத்தரவாதமும் இன்றி கடனுதவி வழங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு வருமான ஆதரவு திட்டத்தின்கீழ் ஆண்டுக்கு 6 ஆயிரம் ரூபாய், முத்ரா கடனுதவி திட்டம் போன்றவற்றால் தமிழகம் அதிக பலன் பெற்றதாகவும் அவர் கூறினார்.

கிராமங்களின் குடிநீர் தட்டுப்பாட்டை போக்க ஜல்ஜீவன் இயக்கம் தொடங்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

மக்களுக்கான நலத்திட்டங்களை தொடர்ந்து நிறைவேற்ற தேர்தலில் பிஜேபிக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று திருமதி வானதி ஸ்ரீனிவாசன் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

மத்திய பல்கலைக்கழகங்களில் பட்டப் படிப்பில் சேர்வதற்கான நுழைவுத்தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள் இம்மாதம் 5ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இத்தேர்வுகளுக்கு விண்ணப்பிக்க கடைசி நாளான நேற்று மாணவர்களிடமிருந்து வந்த கோரிக்கையை ஏற்று இந்த கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளதாக தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.

மாணவர்கள், பள்ளி அடையாள அட்டை அல்லது அரசுத்துறை சார்ந்த புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை ஆகியவற்றைப் பயன்படுத்தி இத்தேர்வை எழுதலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நுழைவுத் தேர்வுகள் மே மாதம் 15ஆம் தேதி தொடங்கி 31ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

<<<<>>>>

நீலகிரி மாவட்டத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதை அடுத்து, கோடை சீசனுக்கான பணிகளை மாவட்ட நிர்வாகம் முனைப்புடன் மேற்கொண்டு வருகிறது.

உதகை தாவரவியல் பூங்கா, குன்னூர் சிம்ஸ் பூங்கா போன்ற இடங்களில் பராமரிப்புப் பணிகள் நடைபெற்று வருகிறது.

இம்மாவட்டத்தில் 7 முக்கிய சுற்றுலாத் தலங்களுக்கு மக்கள் தடையின்றி சென்று வருவதற்கு ஏதுவாக இன்று தொடங்கி ஜூன் மாதம் இறுதி வரை படப்பிடிப்புக்கு தோட்டக்கலைத்துறை தடை விதித்துள்ளதாகவும் எமது செய்தியாளர் கூறுகிறார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

இஸ்ரேல் – ஹமாஸ் இடையே போர்நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்று போப் பிரான்சிஸ் வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

பாகிஸ்தானில் கைபர், **Pakhtun Kawa** மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் 8 குழந்தைகள் உட்பட 10 பேர் உயிரிழந்தனர்.

<<<<>>>>

ராணிப்பேட்டை மாவட்டத்தில் மக்களவைத் தேர்தலில் வாக்களர்கள் அச்சமின்றி வாக்களிக்க காவல்துறையினரின் அணிவகுப்பு பேரணி நடைபெற்றது.

<<<<>>>>

கோபிச்செட்டிபாளையம் அடுத்துள்ள பங்களாபுதூர் தனியார் கல்லூரி அருகே காரும், இருசக்கர வாகனமும் மோதிய விபத்தில் பெண் உட்பட இருவர் பலியாயினர்.

<<<<>>>>

கொடைக்கானல் டால்பின் நோஸ் சுற்றுலா தலத்தில் பள்ளத்தில் தவறி விழுந்த தூத்துக்குடியைச் சேர்ந்த இளைஞரை தீயணைப்புத் துறையினர் மீட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர்.

<<<<>>>>

விழுப்புரம் மாவட்டம் கோட்டகுப்பத்தில் மாவட்ட ஆட்சியர் திரு. பழனி தலைமையில் 100 சதவீத வாக்குப்பதிவுக்கான விழிப்புணர்வு பணி நேற்று நடைபெற்றது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் நேற்றிரவு விசாகப்பட்டிணத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் தில்லி அணி 20 ரன் வித்தியாசத்தில் சென்னை அணியை வென்றது.

இன்றிரவு ஏழரை மணிக்கு மும்பையில் தொடங்கும் ஆட்டத்தில் மும்பை அணியும் - ராஜஸ்தான் அணியும் மோதுகின்றன.

<<<<>>>>